# SOCIO - CULTURAL AND LINGUISTIC PRACTICES OF ALIGAMBAI VANAKURAVARKAL

Eastern University, Sri Lanka
Academic Affairs Department
06 FEB 2017
Vantharumoolai
Chenkalady

24 NOV 2017
EASTERN UNIVERSITY, SRI LANKA

**MRS.CHANDRADEVY THAYAKANTHAN**

EU/PGS/2009/AC/PhD/05

PhD12
Thesis
Library - EUSL

Thesis submitted to the Department of Languages,

Faculty of Arts & Culture, Eastern University,

Sri Lanka for the award of the Degree of Doctor of Philosophy in Tamil,

2015

PROCESSED
Main Library, EUSL

பொருளடக்கம் பக்கங்கள்


நன்றியுரை

ஆய்வுச் சுருக்கம்

குறுக்க விளக்கம்

ஆய்வின் அறிமுகம் 01-06

1. இலக்கிய மீள்பார்வை 07-28

1.1. குறவர்கள் தொடர்பான இலங்கையில் வெளியான ஆய்வுகள் 07-09

1.2. பழங்குடிகள் பற்றிய தென்னிந்திய ஆய்வுகள் 10-24

1.3. ஆங்கில நூல்கள் 24-26

1.4. இணையத் தளக் கட்டுரைகள் 26-27

1.5. தொகுப்புரை 27

2. இலங்கையில் வனக்குறவர் பரம்பலும் வனக்குறவர்கள் தொடர்பான ஐதீகக் கதைகளும் 29-45

2.1. இலங்கையில் வனக்குறவர் வாழிடங்கள் 28

2.1.1. அளிக்கம்பை 28

2.1.2. ஸ்ரீவள்ளிபுரம் 28

2.1.3. பனிச்சையடி 29-32

2.1.4. விவேகானந்தபுரம் 32-33

2.1.5. சிதம்பரபுரம் 33-35

2.1.6. தமணங்குளம் 35

2.1.7. தெலுங்குநகர் 35-36

2.1.8. பமுனாவல 36-38

2.1.9. கல்கமுவ 38

2.1.10. தம்புத்தேகம 38-40

2.1.11. கலாவெவ 40

2.2 வனக்குறவர் தொடர்பான ஐதீகக் கதைகள் 41-43

2.3 தொகுப்புரை 44

3. அளிக்கம்பை வனக்குறவர்களின் சமூக பண்பாட்டு மொழி வழக்காறுகள் 45-88

3.1. வாழ்வியற் சடங்குகள் 49

| | |
|---|---|
| 3.1.1. பிறப்புச் சடங்கு | 50-51 |
| 3.1.2. பெண்பிள்ளை பருவம் எய்தும் சடங்கு | 51-52 |
| 3.1.3. திருமணச் சடங்கு | 52-57 |
| 3.1.4. இறப்புச் சடங்கு | 57-60 |
| 3.2. வழிபாட்டுச் சடங்கு | 60 |
| 3.2.1. அம்மன் சடங்கு | 61-62 |
| 3.3. கல்வி | 62-63 |
| 3.4. பாரம்பரிய வைத்திய முறைகள் | 63-64 |
| 3.4.1. பாம்புக்கடி | 64 |
| 3.4.2. பிரசவம் | 64 |
| 3.4.3. காதுக்குத்து | 64 |
| 3.4.4. பல்வலி | 64 |
| 3.4.5. சிரங்கு புண் நீரிழிவு சொறி | 65 |
| 3.4.6. வயிற்றுக் குத்து | 65 |
| 3.4.7. வெட்டுக்காயம் | 65 |
| 3.4.8. வயிற்றுப் புண் | 65 |
| 3.4.9. இருமல் சளி | 65 |
| 3.5. வனக்குறவர்களின் தொழில்கள் | 66 |
| 3.5.1. வேட்டையாடுதல் | 66-69 |
| 3.5.2. குறிசொல்லுதல் | 70-72 |
| 3.5.3. பாம்பாட்டுதல் | 72-74 |
| 3.5.4. பிச்சையெடுத்தல் | 74-75 |
| 3.6. அடிப்படைத் தேவைகள் | 75-77 |
| 3.7. அளிக்கம்பை வனக்குறவர்களின் மொழி | 78-87 |
| 3.8. தொகுப்புரை | 87-88 |
| 4. அளிக்கம்பை வனக்குறவர் சமூகத்தின் வளர்ச்சியும், மாற்றமும் | 89-127 |
| 4.1. சடங்கு நிலை மாற்றங்கள் | 93-94 |
| 4.1.1. பிறப்புச்சடங்கு | 94-95 |
| 4.1.2. பெண்பிள்ளை பருவம் எய்தும் சடங்கு | 95-96 |
| 4.1.3. திருமணம் | 96-99 |
| 4.2. குடும்ப முறை | 99-100 |
| 4.3. சமயம் | 100-102 |
| 4.4. கல்வி நிலைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள். | 102-107 |
| 4.5. பொருளாதார மாற்றங்கள் | 107-112 |
| 4.6. அடிப்படைத் தேவைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் | 112-116 |
| 4.6.1. யுத்தத்தின் பாதிப்பு | 114-116 |

ஆய்வுச் சுருக்கம்

“அளிக்கம்பை வனக்குறவர்களின் சமூக பண்பாட்டு மொழி வழக்காறுகள்” என்னும் தலைப்பிலான இவ்வாய்வுக் கட்டுரையானது அளிக்கம்பையில் வாழ்ந்து வரும் வனக்குறவர்களை மையப்படுத்தியதாக அமைகின்றது. பழங்குடிப் பண்புடைய குறவர்கள் பற்றிய ஆய்வுப்பார்வைகள் இலங்கையின் மிகக் குறைவாகவே எழுந்துள்ளன. தற்போது இவர்கள் பற்றியதான ஆய்வுப்பார்வைகள் பல்கலைக்கழக மட்டங்களில் பரந்து பட்டவையாகவும்இ ஆழம் மிக்கவவையாகவும் வளர்ச்சி பெற்றுக் கொண்டு வருகின்றன.

அளிக்கம்பை வனக்குறவர் சமூகத்தில் வழங்கப்பட்டுவரும் நாட்டார் கதைகள் அவர்களின் பண்பாட்டு இருப்புக்களைத் தக்க வைப்பனவாக உள்ளன. இலங்கையில் அம்பாறை, அனுராதபுரம், திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் வனக்குறவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இலங்கைக்குரிய பூர்வீகக் குடிகள் அல்லர். ஆனால் இவர்களிடம் பழங்குடிகளுக்குரிய இயல்புகள் மேலோங்கியுள்ளன. இவர்கள் இனக்குழு முறையிலான வாழ்க்கை முறையில் வாழ்ந்து வருகின்றனர்.

அளிக்கம்பை வனக்குறவர்களின் வாழ்வியல் கூறுகள் ஏனைய சமூகங்களை விடவும் விசித்திரமானவை. பொருளாதாரநிலை பெரும்பாலும் ஒரே மாதிரியானதாவே இருக்கின்றது. அனைவரும் ஒரே தொழிலையே மேற்கொள்வர். பாரம்பரியத் தொழில்கள் மூலமே தமது பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர். வேட்டையாடல், குறி சொல்லுதல், குரங்கு வித்தை காட்டல், பாம்பாட்டுதல், பிச்சைஎடுத்தல், மந்தைவளர்ப்பு, சேனைப்பயிர்ச் செய்கை போன்ற தொழில்கள் மூலமே ஆரம்பகாலங்களில் தமது பொருளாதாரத் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டனர். இக்குறவர்களது பொருளாதார நிலையானது பெரும்பாலும் சமத்துவமானதாகவே இருந்தது. ஆண்களும் பெண்களும் மது அருந்தும் பழக்கம் உள்ளதால் எவ்வளவு உழைத்தாலும் அவர்களால் சேமிக்க முடியவில்லை. தற்போது இவர்களின் தொழில் நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. அளிக்கம்பை வனக்குறவர்கள் மாறிவரும் சமூகத்தில் நாகரிக வாழ்வுடன் இணையாது, இணைக்கப்படாது தனித்து விடப்பட்டனர். இன்று இவர்களுக்குக் கல்விச் சமூகத்தால் கிடைக்க வேண்டிய தேவைகள் நிறையவுள்ளன. வனக்குறவர்களின் வாழ்வியலை அறிந்து கொள்வதில் அவர்களின் பழக்கவழக்கங்களும், வாழ்க்கை முறைகளும் தனியிடம் வகிக்கின்றன. இவற்றில் இவர்களது பௌதீகச் சூழலும், சுற்றுப்புறச் சூழலும் தாக்கம் செலுத்துகின்றன.

இவர்களது வாழ்வியல் முறைகளில் சில தனித்துவங்களையும்இ விந்தையான அம்சங்களையும் காணமுடிகின்றது.

அளிக்கம்பை வனக்குறவர்களின் தாய்மொழி தெலுங்காகும். ஆனால் இவர்கள் தமிழ்ப்பிரதேசங்களை அண்டி வாழ்வதால் தமிழ் மொழியைத் திருத்தமாகப் பேசுகின்றனர். தமது இனம் அல்லாத தமிழ்இ முஸ்லீம் மக்களுடன் பழகும்போது இவர்கள் தமிழ் மொழியிலேயே உரையாடுகின்றனர். தெலுங்குமொழி வனக் குறவர்களின் அடையாள மொழியாகும். இவர்கள் தமது இனத்தவர்களுடன் தெலுங்கு மொழியையே பேசுகின்றனர். அத்துடன் தெலுங்கு மொழியுடன் தமிழ், சிங்கள மொழிகளையும் கலந்து பேசும் வழக்கமும் இவர்களிடம் உண்டு. தெலுங்கு மொழி வாய்மொழிப் பாரம்பரியமாகவே பின்பற்றப்படுகின்றது. அதற்குரிய எழுத்து வடிவம் இவர்களிடம் இல்லை.

வனக்குறவர்களின் பண்பாட்டு நடைமுறைகளில் குறிப்பிடக்கூடிய மாற்றங்களை அவதானிக்க முடிந்தாலும் முதியவர்கள் குறவர்களுக்குரிய அடையாளங்களைத் தக்கவைத்துக் கொள்கின்றனர். இளந்தலைமுறையினர் தாம் குறவர்கள் என்பதை ஏனைய சமூகத்தவர்கள் அறிந்து விடக் கூடாது என்பதில் கவனமாக நடந்து கொள்கின்றனர்.